DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 83/2024 Crime No. 161/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW3- கிருபாகரன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.04.2025 |

**1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை-**

நான் பவானி வர்ணபுரத்தில் குடியிருந்து கொண்டு, பாஸ்ட் புஃட் கடை வைத்துள்ளேன். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, சுமார் 1-1/2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 10.00 மணியளவில், நான் அந்தியூர் செல்வதற்காக பவானி பேருந்து நிலையம், வேலா பேக்கரி முன்பு நின்று கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 ஜெய கோபால் என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தார். இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது 3 பேர்கள் அங்கு வந்தார்கள். அதில் இருவர் எங்களுக்கு சற்று தள்ளி நின்று கொண்டார். ஒருவர் மட்டும் வந்து ஜெய கோபாலிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். பின்னர் ஜெய கோபால் அணிந்திருந்த ஒரு செயின், இரண்டு மோதிரங்கள் ஆகியவற்றை பாலீஷ் செய்து தருவதாக கூறி அவர்கள் மூவரும் ஜெய கோபாலிடமிருந்து நகைகளை வாங்கினார்கள். நான் அதனை பார்த்தேன். அந்தியூர் பஸ் வந்ததால் நானும் பஸ்சில் ஏறிச் சென்றுவிட்டேன்.

பின்னர் 2 நாட்கள் கழித்து ஜெய கோபால் என்னிடம் அன்று பேருந்து நிலையத்தில் பாலீஷ் போடுவதற்காக நகைகளை வாங்கி சென்றவர்கள் திருப்பி தரவில்லை என்றும் அதற்கு பதிலாக கவரிங்க நகைகளை கொடுத்து தன்னை ஏமாற்றிவிட்டதாகவும், அது தொடர்பாக ஜெய கோபால் பவானி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக கூறினார். எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். எதிரிகள் இன்று ஆஜரில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 83/2024 Crime No. 161/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2- மயில்சாமி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.04.2025 |

**1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை-**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு, கறிக்கடையில் வேலை செய்து வருகிறேன். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை சுமார் 10.00 மணியளவில், நான் அந்தியூர் செல்வதற்காக பவானி பேருந்து நிலையம், வேலா பேக்கரி முன்பு நின்று கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 ஜெய கோபால் என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தார். இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது 3 பேர்கள் அங்கு வந்தார்கள். அதில் இருவர் எங்களுக்கு சற்று தள்ளி நின்று கொண்டார். ஒருவர் மட்டும் வந்து ஜெய கோபாலிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். ஜெய கோபால் என்னிடம் இதோ வந்து விடுகிறேன் என்று கூறி அந்த நபருடன் சென்றார். அந்தியூர் பஸ் வந்ததால் நானும் பஸ்சில் ஏறிச் சென்றுவிட்டேன்.

பின்னர் மதியம் ஜெய கோபால் எனது வீட்டிற்கு வந்து பேருந்து நிலையத்தில் அந்த நபர்கள் தன்னை அழைத்துக் கொண்டு பின்புறமாக சென்று தனது முதுகில் ஏதோ செய்ததாகவும், பின்னர் நான் அவர்களிடம் தனது செயின் ஒன்றையும், மோதிரம் இரண்டையயும் கழட்டி கொடுத்துவிட்டதாகவும், அதை வாங்கிச் சென்றவர்கள் பின்னர் வரவில்லை என்றும் கூறினார். நாங்கள் ஜெய கோபாலுடன் சென்று பவானி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். எதிரிகள் இன்று ஆஜரில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 83/2024 Crime No. 161/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW1- ஜெய கோபால் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.04.2025 |

**1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை-**

நான் பவானி வர்ணபுரத்தில் குடியிருந்து கொண்டு, கேஸ் ஏஜென்சியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 25.02.2024 ம் தேதியன்று, காலை சுமார் 10.00 மணிளவில், நான் எனது உறவினர் வீட்டு திருமணத்திற்கு மதுரை செல்வதற்காக பவானி பேருந்து நிலையம் அருகேயுள்ள வேலா பேக்கரி அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது நான் கழுத்தில் செயினும், இரண்டு கைகளில் இரண்டு மோதிரமும் அணிந்திருந்தேன். அங்கு பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய 3 நபர்கள் இருந்தனர். அதில் ஒருவர் முதலில் வந்து நான் அணிந்திருக்கும் செயினும் மோதிரங்களும் தங்கம் இல்லை என்று கூறினார். அவருடன் வந்திருந்த மற்ற 2 நபர்களும் அவ்வாறே என்னிடம் கூறி என்னை ப்ரைன் வாஷ் செய்தார்கள். பின்னர் நான் அணிந்திருந்த செயினையும், இரண்டு மோதிரங்களையும் கழட்டி தருமாறும் அவர்கள் அதனை பாலீஷ் செய்து தருவதாகவும் கூறினார்கள். நானும் அவர்கள் கூறியதை நம்பி செயினையும் இரண்டு மோதிரங்களையும் கழட்டி தந்தேன். அப்போது எதிரிகள் இரண்டு கல் வைத்த டாலரையும் ஒரு செயினையும் என்னிடம் தந்துவிட்டு, நாங்கள் உங்களது நகைகளை பாலீஷ் போட்டுவிட்டு திருப்பி உங்களது நகைகளை தந்துவிட்டு இந்த நகைகளை பெற்றுக் கொள்கிறோம் என்று கூறினார்கள். பின்னர் நான் அங்கேயே சுமார் 3 மணி நேரம் காத்திருந்தேன். ஆனால் எதிரிகள் அவர்கள் கூறியவாறு திரும்பி வரவில்லை. எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். எதிரிகள் இன்று ஆஜரில்லை.

பின்னர் நான் திருமணத்திற்காக மதுரை சென்றுவிட்டேன். அங்கிருந்து வந்து 26.02.2024 ம் தேதியன்று, நான் பவானி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்பொழுது நீதிமன்றத்திலுள்ள கவரிங் நகைகளான கல் வைத்த இரண்டு டாலர்கள் மற்றும் ஒரு செயின் இவற்றைத்தான் எதிரிகள் தன்னிடம் கொடுத்ததாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். அந்த செயின் அ.சா.பொ.1 ஆகவும், கல் வைத்த டாலர்கள் இரண்டு அ.சா.பொ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் சிறிது நாட்கள் கழித்து எனது நகை கிடைத்துவிட்டதாக கூறினார்கள். ஜூலை மாதம் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து

எனது செயினையும் மற்றும் இரண்டு மோதிரங்களையும் பெற்றுக் கொண்டேன். அதற்கான புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.